**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 08.09.2021–ஆம் தேதி பிற்பகல் 3.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : 07.09.2021

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 Q 8402–ற்கு புதிய மின்கலன் வாங்கும் பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனங்களின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஆண்டவர் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் & பேட்டரி, இராசிபுரம் | ரூ. 7200/– |
| 2 | இந்தியன் பேட்டரி ஹவுஸ், சேலம் | 6500/– |
| 3 | எக்ஸல் ஏஜென்சீஸ் | 6700/– |

பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில் இந்தியன் பேட்டரி ஹவுஸ், சேலம் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(3155/21/இ2)

**தீர்மானம் எண். 1081**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் TN 28 Q 8402 2007–ஆம் ஆண்டு வாங்கப்பட்டு 14 ஆண்டுகள் கடந்த நிலையில் இதுநாள் வரை 3,35,000 கி.மீ.–க்கு வாகனம் இயக்கப்பட்டுள்ளது. இவ்வாகனம் அடிக்கடி பழுது ஏற்பட்டு மே 2021 வரை உத்தேசமாக ரூ. 530000/– செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி ஈப்பு வாகனத்தின் தகுதி காலமான 15 ஆண்டுகள் முடியும் தருவாயில் உள்ளதாலும், இவ்வாகனம் அடிக்கடி பழுதடைந்து அதிக செலவினம் மேற்கொள்ளப்படுவதாலும் இவ்வாகனத்தை கழிவு செய்து புதிய ஈப்பு வாகனம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வாங்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) புதிய ஈப்பு வாகனம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(3282/21/இ2)

**தீர்மானம் எண். 1082**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி பதிவு எண். TN 28 AS 0104–இல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 34755/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்
2) அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலனை முன்னிட்டும், டிப்பர் லாரியில் ஏற்பட்ட பழுதுகளை தயாரிப்பு நிறுவனத்தின் ஏஜென்சி மூலம் சரி செய்ய நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, பணியாணையும், பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(3304/21/எச்1)

**தீர்மானம் எண். 1083**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் வசிக்கும் நகர பொது மக்களுக்கு டெங்கு நோய் பரவாமல் தடுக்கவும், டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ளவும், DBC பணியாளர்களுக்கு நோய் தடுப்பு பணி செய்ய டார்ச் லைட்–40, அளவுமானி (100 ML) –50, சில்வர் கரண்டி–30 ஆகியவற்றை கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 30000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/3353/21)

**தீர்மானம் எண். 1084**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான சாலை உருளை (Road Roller) கடந்த 30 ஆண்டுகளாக இயக்க முடியாத நிலையில் பயன்பாடற்ற நிலையில் உள்ளது. தலைமை செயலாளர், சென்னை அவர்களது கடிதம் எண். 875/Special-B/2012-2, நாள் 09.06.2021–இல் தெரிவித்துள்ளவாறு, இச்சாலை உருளையினை கழிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(3214/21/இ2)

**தீர்மானம் எண். 1085**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சி பொறியியல் பிரிவில் அத்தியாவசியமான சிறு பணிகள் மேற்க்கொள்ள அலுவலக முன்பணமாக ரூ. 5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) நகராட்சி பொறியாளருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(3299/21/இ1)**

**தீர்மானம் எண். 1086**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சி தெரு விளக்கு பராமரிப்பில் உபயோகப்படுத்தப்பட்டு தற்போது பயன்படுத்த இயலாத நிலையிலுள்ள கீழ்காணும் மின் பொருட்கள் விவரங்கள் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | குழல் விளக்கு பிட்டிங்குகள் | – | 340 எண்ணிக்கை |
| 2) | சோடியம் விளக்கு பிட்டிங்குகள் | – | 268 எண்ணிக்கை |
| 3) | டியூப் லைட் (40 வாட்ஸ்) சோக்குகள் | – | 790 எண்ணிக்கை |
| 4) | குழல் விளக்குகள் | – | 860 எண்ணிக்கை |
| 5) | சோடியம் பல்புகள் | – | 194 எண்ணிக்கை |
| 6) | சோடியம் சோக்குகள் | – | 103 எண்ணிக்கை |
| 7) | டைமர் சுவிட்சுகள் | – | 28 எண்ணிக்கை |
| 8) | மின் விசிறிகள் | – | 2 எண்ணிக்கை |

மேற்காணும் உபயோகமற்ற மின் பொருட்களை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் விற்பனை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(233/21/இ1)**

**தீர்மானம் எண். 1087**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சி வி. நகர் நடுநிலைப் பள்ளியில் காலியாக உள்ள இடத்தில் கூடுதலாக மூன்று வகுப்பறைகள் கட்ட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 40.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** **அ)** ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ) . பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(2889/21/இ1)**

**தீர்மானம் எண். 1088**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– சி. கிருபாகரன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (கூ.பொ.),
இராசிபுரம் நகராட்சி